Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 147

சனிக்கிழமை 22 ஏப்ரல் 2023

சித்திரை 09 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054




## தாயகத்தில் கதவடைப்பு: தமிழ்க் கட்சிகள் ஆதரவு!

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 22**

**பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராகவும், தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படுகின்ற சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பைக் கண்டித்தும் எதிர்வரும் 25 ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ள கதவடைப்புப் போராட்டத்துக்கு தமிழ்க் கட்சிகள் ஓரணியில் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.** »11

## துப்பாக்கி தயாரித்தவர் பொலிஸாரால் கைது!

தருமபுரத்தில் சம்பவம்



கிளிநொச்சி, ஏப். 22

கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு பகுதியில், கட்டுத்துப்பாக்கி தயாரித்த நபரொருவர் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். »11

## பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம்: கலந்துரையாடல்கள் அவசியம்

கொழும்பு, ஏப். 22

புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டவரைவு தொடர்பில் பரந்துபட்ட கலந்துரையாடல் அவசியம். எனவே, சட்டவரைவு முன்வைக்கப் »11

## முல்லையில் விபத்து: ஒருவர் பரிதாபச் சாவு!



முல்லை., ஏப். 22

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட வற்றாப்பளை வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்தார். பரமேஸ்வரன் (வயது - 49) என்பவரே உயிரிழந்தவராவார். »11



ஈஸ்டர் தாக்குதல்

## யாழ். மரியன்னை பேராலயத்தில் நேற்று உணர்வுபூர்வ அஞ்சலி

பல்கலையிலும் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஏப். 22

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் நான்காம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயத்தில் நேற்று உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக் »11

## விடைத்தாள் திருத்தம்: பணி நேற்று ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 22

உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்துவதற்கான முதற்கட்டப் பணிகள் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் வரித்திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆசிரியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனால், அவர்கள் உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் »11

## போதை ஊசியுடன் மூவர் கைதாகினர்!

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ்ப்பாணம், நல்லூர் பழம் வீதியில் போதை ஊசியுடன் மூவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பொ.மேனன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையி »11

## ஹெரோய்னுடன் ஒருவர் கைது!

யாழ்., ஏப். 22

ஊர்காவற்றுறைப் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட சுருவில் பகுதியில் உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்னை உடைமையில் »11

அராலியில்

## ஒரே இரவில் 7 வீடுகள் மீது வன்முறைக் கும்பல் அடாவடி

மூவர் மருத்துவமனையில்; வட்டு. பொலிஸார் அசமந்தம்

யாழ்ப்பாணம், ஏப். 22

75 பேரைக் கொண்ட வன்முறைக் கும்பலொன்று ஒரே இரவு 7 வீடுகளில் புகுந்து தாக்குதல் நடத்தி அட்டகாசம் புரிந்து தப்பிச் சென்றுள்ளது. தாக்குதலில் காயமடைந்த நிலையில் மூவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி கரைப்பிட்டி பிள்ளையார் கோயில் »11



## வவுனியாவில் கடும்காற்று பயன்தரும் மரங்கள் அழிவு

வவுனியா, ஏப். 22

வவுனியா வடக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் நிலவிய கடும் காற்றுடனான காலநிலையால், பயன்தரு மரங்கள் பலவும் அழிவடைந்துள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். வவுனியா வடக்கு ஓடைவெளி கிராமத் »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தை ஒரே குரலில் நாடினாலேயே தீர்வு கிட்டும்!

## ஈஸ்டர் தாக்குதல் அஞ்சலியில் ஈ.சரவணபவன் சுட்டிக்காட்டு



**யாழ்ப்பாணம், ஏப். 22**

**2009ஆம் ஆண்டு இறுதிப்போரின்போது இடம்பெற்ற இனப்படுகொலையானாலும் சரி அல்லது உயிர்த்தஞாயிறுத் தினத்தன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களானாலும் சரி நாம் ஒருமித்து ஒரே குரலில் சர்வதேசத்திடம் சென்றாலேயே தீர்வு கிட்டும் - இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன்.**

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவனின் ஏற்பாட்டில் உயிர்த்தஞாயிறுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் நடத்தப்பட்டு இன்று 4 ஆண்டுகள் கடந்துவிட்டன. கொல்லப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படவில்லை. உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் சூத்திரதாரிகள் யார் என்று தெரிந்திருக்கும் அவர்கள் தண்டிக்கப்படாமல் காப்பாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆட்சியில் இருந்தவர்கள், இருக்கின்றவர்கள் உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் சூத்திரதாரிகளைக் காப்பாற்றி வருகின்றனர். அவர்கள் தங்களின் மனச்சாட்சிக்கு எதிராக வேலை செய்கின்றனர். இது மிகவும் வெட்கக்கேடானதும், அநாகரிகமானதுமான செயல். 2009ஆம் ஆண்டு இறுதிப்போரின்போது இடம்பெற்றதாகச் சொல்லப்படும் இனப்படுகொலைகளுக்கு நீதி கோரி சர்வதேசத்தின் உதவியை நாங்கள் நாடியுள்ளோம். உள்நாட்டு விசாரணைகளில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. கத்தோலிக்க திருச்சபையின் இலங்கைக்கான கர்தினால் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்களுக்கு நீதிகோரி சர்வதேசத்தையே நாடியுள்ளார். எங்களுக்கு நீதி தேவை என்றால் நாம் ஒருமித்த குரலில் சர்வதேசத்தை அணுகவேண்டும். சர்வதேசத்தை அணுகுவது தொடர்பிலும் அதன் தலையீடு தொடர்பிலும் நாம் தீவிரமான கலந்துரையாடல்களை நடத்தவேண்டும் - என்றார்.

(அ-ம-125)




உயிர்த்த ஞாயிறுத் தின குண்டுத் தாக்குல் சம்பவத்தில் பலியானவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்கான 4 ஆவது ஆண்டு நினைவு தின விசேட ஆராதனைகளும் அஞ்சலி நிகழ்வுகளும் தாக்குதல் இடம்பெற்ற கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம், நீர்கொழும்பு கட்டுவப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயம் மற்றும் மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று முன்னெடுக்கப்பட்டது. (ம)

# பிரதேசசெயலர் கடிதம் வழங்கியும் இதுவரை காணி விடுவிக்கவில்லை

## காணி உரிமையாளர்கள் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப். 22

முல்லைத்தீவு உடையார்கட்டு தெற்கு கிராமத்தில் உள்ள 12 ஏக்கர் காணியை உரிமையாளர்களிடமே கையளிக்க வேண்டும் என்று புதுக்குடியிருப்பு பிரதேசசெயலரால் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு கடிதமொன்று அண்மையில் அனுப்பப்பட்டது. எனினும் இதுவரையில் காணி விடுவிக்கப்படவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோரிடம் காணியின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உடையார்கட்டு தெற்குக் கிராமத்தில் குளத்தின் கீழ்ப் பகுதியில் உள்ள 4 விவசாயிகளின் 12 ஏக்கர் காணி, சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் விவசாயப் பண்ணையாக செயற்பட்டு வருகின்றது. இது தொடர்பில் காணி உரிமையாளர்கள் பல தடவைகள் வடமாகாண ஆளுநர், மனித உரிமை ஆணைக்குழு, மாவட்டச்செயலர் ஆகியோருக்கு முறையிட்டும் காணி விடுவிக்கப்படவில்லை. இந்த நிலையில் விவசாயிகளின் காணியை விடுவிக்குமாறு கோரி கடந்த 17ஆம் திகதியன்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் எஸ்.ஜெயகாந்தனால் வள்ளிபுனம் புதுக்குடியிருப்பில் உள்ள சிவில் பாதுகாப்புத் திணைக்கள கட்டளைத்தளபதிக்கு கடிதம் வழங்கப்பட்டது. அந்தக் கடிதத்தில் காணி உரிமை கோருபவர்களுக்கு உடனடியாக கையளிப்புச் செய்து காணியில் பயிர்ச்செய்கையில் ஈடுபட ஒத்துழைப்பு வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

1976 ஆம் ஆண்டு குறித்த காணியில் உரிமையாளர்கள் செய்கை பண்ணி வந்த நிலையில், காணி ஆவணங்கள் போர்க்காலத்தில் அழிந்துவிட்டன. தற்போது இருந்த ஆவணங்கள் பிரதேசசெயலரிடம் ஒப்படைக்கப்பட்டு செய்கையாளர்களுக்கான ஆதாரங்கள் காணிக்கச்சேரியில் முன்வைக்கப்பட்டன. அவர்கள் அதனை ஏற்றுக்கொண்டார்கள். அத்துடன் மனித உரிமை ஆணைக்குழுவும் காணியினை உரிமையாளரிடம் வழங்குமாறு கூறியுள்ளது என்று காணியின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இதுவரையில் தங்களின் காணி விடுவிக்கப்படவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோரை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காணிப் பகுதிக்கு அழைத்து தங்கள் நிலைமையை எடுத்துரைத்தனர். அதனையடுத்து இது தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்ததாவது.

விவசாயிகளின் காணிகள் விடுவிக்கவேண்டும். விடுவிப்பதற்கான கால அவகாசத்தை குறித்த தரப்புக்கு நாங்கள் கொடுக்கின்றோம். அவர்கள் ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் எங்கள் உரிமையை கோருவதற்கு, காணியை முழுமையாக மக்களுக்கு எடுத்துக்கொடுப்பதற்கு பொறுப்பெடுத்து மக்களுடன் சேர்ந்து செயற்படுவோம் - என்றார்.

(ஒ-14-19)

# கண் சொட்டு மருந்து தடைசெய்ய உத்தரவு

கொழும்பு, ஏப். 22


இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பிறிட்னிசிலோன் கண்சொட்டு மருந்துகளை உடனடியாக பயன்பாட்டிலிருந்து நீக்குமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைய கண் சொட்டு மருந்துகளை மருத்துவமனைகளுக்கு வழங்குவது இடைநிறுத்தப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவு அறிவித்துள்ளது.

தேசிய கண் மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சைகளின் பின் ஒரே சந்தர்ப்பத்தில் மூன்று நோயாளர்களுக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது.

சத்திரசிகிச்சைக்குப் பயன்படுத்தப்பட்ட அனைத்து மருந்துகளும் பரிசோதனைகளுக்காக அனுப்பப்பட்டு கிடைத்த அறிக்கைக்கமைய நோய்த் தொற்றுக்கு காரணமான மருந்து கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் தொற்றுக்குள்ளான நோயாளர்களுக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட சிகிச்சை நிலையங்களில் கிருமிகள் இருக்கலாம் என்ற அடிப்படையில் கண் மருத்துவமனையை மூடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தேசிய கண் மருத்துவமனையின் பேச்சாளர் கூறினார்.

(ச-இ)



## யாழ்.நகரில்

# வெள்ளை ஈக்கள் பாதித்த தென்னைகளுக்கு சிகிச்சை

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ்.நகரப் பகுதிகளில் வெள்ளை ஈயின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட தென்னைகளுக்கு வடக்கு மாகாண தென்னை பயிர்ச்செய்கை சபையின் யாழ். பிராந்திய காரியாலயத்தால் சிகிச்சையளிப்பு நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட தென்னை மரங்களின் தென்னோலைகள் நீர் விசிறல் மூலம் முழுமையாக கழுவப்பட்டது. இந்த நடவடிக்கையில் தென்னை பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் தேவராஜா வைகுந்தன், தென்னை பயிர்ச்செய்கை சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பங்கேற்றனர்.

(ச-125)

# காணிகளை விடுவிக்கக்கோரி ஆளுநருக்கு மனு கையளிப்பு

வடக்கு - கிழக்கு பெண்கள் அணி மற்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் ஆகியன ஒன்றிணைந்து பொதுமக்களின் காணிகளை விடுவிக்கக் கோரி வடமாகாண ஆளுநருக்கு மனுவொன்றை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கையளித்துள்ளது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தால் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகளின் அடிப்படையில் அதிகளவான மக்கள் காணிகளை இழந்து முகாம்களில் தங்கியிருப்பது கண்டறியப்பட்டது.

அவர்களின் காணிகளை உடனடியாக விடுவித்து அவர்களின் சொந்த நிலத்தில் குடியமர அனுமதிக்க வேண்டும் என்றவாறான கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்றைக் கையளித்தனர்.

இதேவேளை பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு வடமாகாண பெண்கள் குரல் என்ற அமைப்பு நேற்றுமுன்தினம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதுடன் அவர்களும் இணைந்து ஆளுநருக்கு மனு ஒன்றை கையளித்தனர்.

(ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டக்ளஸ் - அருண் சித்தார்த் பங்கேற்பில்

# புத்தர் - இந்து விக்கிரகங்களுடன் திருலங்காபுரி சைவ ஆதீனம் திறப்பு

**யாழ்ப்பாணம், ஏப். 22**

**பருத்தித்துறை வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட திருலங்காபுரி சைவ ஆதீன திறப்பு விழா நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் இடம்பெற்றது. சைவ சமய விக்கிரகங்களுடன் புத்தரின் சிலையும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது.**

இதில் மிகக் குறைந்தளவு இந்து மக்கள் பங்கெடுத்தது டன் திறப்பு விழாவுக்கு குரு நாகல் உமங்தாவ கிராமத்தி லிருந்து 10 இற்கு மேற்பட்ட பிக்குகள் வருகை தந்ததுடன் நாக விகாராதிபதியும் கலந்து கொண்டார். இவர்களுடன் ஏராளமான பௌத்த மக்களும் பங்கெடுத்திருந்தனர்.

விகாரையில் பிரதிஷ்டை செய் வதற்கு சிவலிங்கமொன்று அன்பளிப்பாக பிக்குகளிடம் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ் வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அரச ஆதரவுப் போராட்டங்களை நடத்தும் அருண் சித்தார்த் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ஒ-இ)

# ஹோட்டல் மீது வன்முறைக்கும்பல் தாக்குதல்!



யாழ்ப்பாணம், ஏப். 22

நல்லூரிலுள்ள ஹோட்டல் ஒன்றின் மீது நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் அத் துமீறி நுழைந்த கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தி பெரும் சேதம் விளைவித்துள்ளது. அத்துடன் ஹோட்டல் உரிமையாளர் மீது சாணி கலந்த தண்ணீரை யும் ஊற்றியுள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அரசதரப்பு ஆதரவு போராட்டங்களை நடத் தும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அருண் சித்தார்த் என்பவரின் தலை மையில் வந்த அவரது குடும் பத்தினரே இந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாக ஹோட்டல் உரிமை யாளர் குற்றம் சுமத்தியுள்ளார். ஹோட்டலுக்கு நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் காரில் வந்திறங்கியுள்ளனர். 3 பெண்கள் உட்பட 7 பேர் கொண்ட அந்தக் கும்பலுக்கு அருண் சித்தார்த் தலைமை தாங்கிய தாக ஹோட்டல் உரிமையாளர் குறிப்பிடுகின்றார்.

காரில் வந்து இறங்கிய கும்பல் முதலில் ஹோட்டல் கண்ணாடி களையும் அங்கிருந்த வாகனங் களையும் தாறுமாறாக அடித்து நொருக்கிச் சேதமாக்கியுள்ளது. அத்துடன் சி.சி.ரி.வி. சேமிப்ப கத்தையும் அடித்து எடுத்துச் சென்றுள்ளது. ஹோட்டல் உரி மையாளர் மீது சாணி கலந்த தண்ணீரும் ஊற்றப்பட்டுள் ளது. சுமார் அரை மணி நேரத் தாக்குதலின் பின்னர் கும்பல் அங்கிருந்து தப்பிச்சென்றுள் ளது.

தாக்குதலால் ஹோட்டலுக்கு பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள் சேதம் ஏற்பட்டுள்ளதா கவும் ஹோட்டல் உரிமையா ளர் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

ஹோட்டல் உரிமையாளர் ஐக் கிய மக்கள் சக்தியின் அமைப் பாளர்களுள் ஒருவராக இருக் கின்றார். இருப்பினும் இந்தத் தாக்குதல் சம்பவம் தனிப்பட்ட பகைமையாலேயே நிகழ்ந்தது என்று பொலிஸார் தெரிவிக் கின்றனர். (ஒ-26)

# மக்கள் அனுமதி வழங்கினாலே நாவற்குழியில் கழிவு எரியூட்டி!

## யாழ்.போதனா பணிப்பாளர் தெளிவுபடுத்தல்

யாழ்ப்பாணம், ஏப். 22

மருத்துவமனைக் கழிவுகளை எரிப்பதற்கான தளம் நாவற் குழி மக்கள் ஏற்றுக்கொண்டால் மாத்திரமே அங்கு அமைக்கப் படும் என யாழ்.போதனா மருத் துவமனை தெரிவித்துள்ளது.

மருத்துவமனை கழிவுகளை எரிப்பதற்கு நாவற்குழி மேற்கு கிராம அலுவலர் பிரிவில் சிவ பூமிக்குச் சொந்தமான காணியை வழங்க அந்த அமைப்பு முன் வந்திருந்தது. இந்த நிலையில் அதுதொடர்பான கலந்துரையா டல் கூட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்.போதனா மருத்துவமனையில் இடம்பெற் றது.

எரியூட்டி அமைக்கப்படவுள்ள காணியானது குடியிருப்புக் களை அண்மித்த காணியாக உள்ளது.

காணியின் வடக்கு மற்றும் கிழக் குப் பகுதிகள் வயல் நிலங்களா கவும், தெற்குப் பகுதி கடற்றொழி லாளர்கள் பயன்படுத்தும் பர வைக்கடலாகவும் காணப்ப டுகின்றது. சூழ ஆலயங்கள், குளங்கள் மற்றும் குடிதண்ணீர் கிணறுகள் காணப்படுகின்றன. எரியூட்டி அமைக்கப்பட்டால் நிலத்தடி நீர் மாசுபடுவதுடன் போதிய கண்காணிப்பு இல்லாத பட்சத்தில் கழிவுகள் குடியிருப் புக்களுக்குள் கலக்கலாம்.

அத்துடன் கழிவுகளைக் குடியி ருப்புகள் மற்றும் ஆலயங்கள் ஊடாக கடந்து எடுத்துச் செல்ல நேரிடுவதால் அசௌகரியங் களுக்கு உள்ளாகக்கூடும். அத்துடன் காற்று வீசும்போது எரிகூடத்தில் இருந்து வெளி வரும் மாசுக்காற்று சுற்றுச் சூழலை பாதிப்படையச் செய்வ துடன் நோய் நொடிகள் ஏற்ப டக்கூடும் என பிரதேச மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அந்தவகையில் எரியூட்டி அமைப்பதற்குரிய பங்குதாரர்க ளுடன் சந்திப்பொன்றை நடத்தி மக்களுக்கு விளக்கமளிக்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப் படும்.

பிரதேச மக்களின் அனுமதி யின்றி இந்தத் திட்டம் செயற்ப டுத்தப்படமாட்டாது. மக்கள் எதிர்ப்பு வெளியிட்டால் கழிவு களை எரிக்க பொருத்தமான வேறு இடத்தை பரிசீலிப்போம் என யாழ்.போதனா மருத்துவ மனைப் பணிப்பாளர் த.சத்திய மூர்த்தி தெளிவுபடுத்தினார்.


(ச-இ)




**கொ**ஞ்சநாளைக்கு முதல் அக்குபஞ்சர் டொக்டர் பற்றி பட்சி சொல்லியிருந்தது உங்க ளுக்கு நினைவிருக்கும். அதுக்குப் பிறகு சுகா தாரத்துறை உடனடியா நடவடிக்கை எடுத்ததால, அக்குபஞ்சர்காரரை பொலிஸ் பிடிச்சு நீதிமன் றத்தில விட்டிட்டுது. யுரியூப்பில இங்கிலிஷ் மருந்து குடுக்கிற டொக்டர்மாரை பிளந்து கட்டி, சவாலுக்கு கூப்பிட்ட அக்குபஞ்சர்காரர் நீதிமன்றக் கூண்டில ஏத்திவிட்டதும் அப்பிடியே சப்தநாடியும் ஒடுங்கிப் போய், அழாக்குறையா மன் னிப்புக் கேட்டதாலதான் அவருக்குப் பிணை கிடைச்சிருக்குது. இல்லாட்டி வீடியோவில கதைச்சமாதிரி வீறாப்பாக் கதைச்சிருந்தால் எல் லாம் அம்பேல் ஆகியிருக்கும். நல்லவேளையா ஆள் நாக்கை கொன்ரோல் பண்ணினதால தப்பியிருக்கிறார்.

ஆனால், அவரைப் பொலிஸ் பிடிக்க முதல் ஒரு பேட்டி குடுத்திருக்கிறார். அதில நாங்கள் எங்கையெங்க வருத்தம் இருக்கெண்டு நாடி பிடிச்சுப் பார்த்து அதுக்குரிய மையங்களில ஊசியைக் குத்தி அதை இல்லாமல் பண்ணுறம். அதால நான் என்ர மருத்துவத்தை எங்கையும் பதிவு செய்யத் தேவையில்லை எண்டு சொல்லி யிருந்தார். அப்பிடி அவர் சொல்றமாதிரி பதிவு செய்யாமல் எல்லாரும் இப்பிடி ஊசி குத்தி விளையாடலாமெண்டால் ஒழுங்கைக்கு ஒழுங்கை ஒவ்வொரு அக்குபஞ்சர்காரர் இருக் கலாமே. அதோட உந்த அக்குபஞ்சர்காரர் கேரளாவில எங்கையோ உந்த அக்குபஞ்சரை படிச்சவரெண்டு சொல்லுறார். ஆனால், அதுக் குரிய எந்த ஆதாரத்தையும் இதுவரைக்கும் அவர் காட்டேலை. அதோட மூச்சுக்கு முந்நூறுதரம் சித்த மருத்துவத்தில இருக்கிற வாதம், பித்தம், கபம் பற்றியும், எங்கட பாரம்பரியச் சாப்பாடுகளின்ர மருத் துவக் குணம் பற்றியும் சொல்லுறார். ஆனால், சீனாவில உருவான உந்த அக்குபஞ்சருக்கும், எங்கட சித்த மருத்துவத்துக்கும் என்ன சம்பந்தம்? அதோட அக்குபஞ்சர் செய்யிறவை உந்த வாதம், பித்தம், கபம் எண்டதைக் கணக்கில எடுத்து வைத்தியம்செய்யிறேலை. இவர் கொஞ்சக்காலம் சித்த மருத்துவம் படிச்சவர் எண்டதால ஊசி குத்துறதையும், சித்த மருத்துவத்தையும் 'மிக்ஸ்ட்' பண்ணி புதிசா ஏதோ செய்யிறார் போல.

என்னதான் அந்தாள் பதிவு செய்யாமல் வைத்தியம் செய்யுதெண்டு முறைப்பாடுகள் வந்தாலும், இங்கிலிஷ் டொக்டர்மார் கைவிட்ட ஆக்கள் சிலரின்ர வருத்தத்தை மாத்தி இருக்கிறார். அப்பிடி மாறுற வருத்தங்களை 'மெய்ப்பாட்டு நோய்' எண்டுவினம். எங்கட மனத்தில வாற மாற்றங்கள், எண்ணங்கள் தான் இப்பிடியான வருத்தங்கள் மாறாமல் இருக்கக் காரணம். அப்பிடி என்ன மனமாற்றத்தால இந்த வருத்தம் வந்தது எண்டு கண்டுபிடிச்சு, அதுக்கேத்தபடி அன்பா, ஆதரவா நோயாளியோட நடந்தாலே அது மாறிடுமாம். அப்பிடித்தான் இந்த அக்குபஞ்சர்காரர் நாடி பிடிச்சு, வருத்தக்காரரோட பக்குவமா நடந்ததால் அவையின்ர வருத்தம் மாறியிருக்கலாம். அப்ப,எங்கட இங்கிலிஷ் டொக்டர்மாரும் இப்பிடி தங்களிட்ட வருத்தக்காரரிட்ட கொஞ்சம் அன்பா நடந்தால், மருந்தில்லாமலே ஊரிப்பட்ட வருத்தங்களை இல்லா மல் செய்யலாமெல்லோ. ஒரு அக்குபஞ்சர்காரரே இவ்வளவு செய்யேக்க இங்கிலிஷ் மருத்துவம் செய்யிற டொக்டர்மாரால முடியாதோ?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹர்த்தாலுக்கு ஆதரவில்லை

## 'வழமைபோன்று' முன்னணி அறிக்கை

**யாழ்ப்பாணம், ஏப். 22**

**வடக்கு - கிழக்கில் எதிர்வரும் 25ஆம் திகதி ஹர்த்தாலை முன்னெடுக்கின்ற தமிழ் தரப்புகளுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இணையப் போவதில்லை. அவ்வாறு இணைந்தால் அது தமிழ் மக்களை முட்டாளாக்கும் செயற்பாடாகவே அமையும்- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, ஹர்த்தாலானது எங்களுடன் சம்பந்தப்பட்ட விடயம் அல்ல. குறித்த தமிழ்த் தரப்புகள் புதுப்புது அமைப்புக்களை உருவாக்க முன்னரே, இவற்றுக்கெதிராக நாம் போராடிக் கொண்டிருக்கும் அமைப்பு. இந்த விடயங்களை எதிர்க்க வேண்டுமென்றால் வேறு எவருடைய உதவியையும் தேடாமல், மக்களிடம் இவற்றைக் கொண்டு செல்ல முடியும். தமிழ் மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அமைப்பை உருவாக்கிக் கொள்பவர்கள், இந்தப் பிரச்சினைக்கு அடிப்படையான ஒற்றையாட்சி அரசமைப்பு உட்பட 13ஆம் திருத்தச்சட்டத்தை தொடர்ந்தும் ஆதரிக்கின்றனர்.

ஒருபுறம் அமைப்புகளை உருவாக்கிப் போராடுகின்றோம் என மக்களை ஏமாற்றுபவர்கள், மறுபுறம் இவை அனைத்தையும் மேற்கொள்ள ஒற்றையாட்சிக்குள்ளிருக்கும் 13ஆம் திருத்தச்சட்டத்தை எதிர்க்க முதுகெலும்பற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவ்வாறான தரப்புகளுடன் இணைவதானது, மக்களை முட்டாள்களாக்கும் செயற்பாடாகும்- என்றார். (ஒ-இ)

# முத்தமிழ் மன்ற விருது

யாழ்ப்பாணம், ஏப். 22

ஏழாலை முத்தமிழ் மன்றமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் முத்தமிழ்மன்ற விருது விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஏழாலை முத்தமிழ்மன்றக் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. ஏழாலை முத்தமிழ் மன்றத் தலைவர் நா.இலட்சுமிகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-14,66)

# கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்

**யாழ்ப்பாணம், ஏப். 22**

**இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் மனிதவள முகாமைத்துவம் குறுகியகாலக் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.**

**விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் மே மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் விண்ணப்பத்தைப் பெற்று விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-14)**

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 22

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ மகாகாளி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் மே மாதம் 3ஆம் திகதி புதன்கிழமை இரவு சப்பறத் திருவிழாவும், 4ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்றையதினம் மாலை 6 மணிக்குக் கொடியிறக்க உற்சவமும் நடைபெறவுள்ளது என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ஒ-14,66)

# சோபகிருது

## தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்

### கடகம்



சுற்றம் நட்புக்காக உழைப்பவர் நீங்கள்; பொது நலம் பேணுபவர். உங்கள் ராசிக்கு 7ஆவது ராசியில் இந்த தமிழ்ப் புத்தாண்டு பிறப்பதால், பாதியிலேயே நின்ற பல வேலைகள் இனி பூர்த்தியாகும். திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புகள் கிட்டும்.

மன இறுக்கம் குறையும். எதிலும் திட்டமிட்டு செயல் படுவீர்கள். வேலை இல்லாதவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். பழைய சிக்கல்களுக்குத் தீர்வு கிடைக்கும். செலவுகள் குறையும்.

வைகாசி, ஆவணி, புரட்டாசி மாதங்களில் வெளிநாட்டிலுள்ள நண்பர்கள் உறவுகளால் திடீர் திருப்பம் உண்டாகும். சொந்த வீடு வாங்கும் முயற்சி வெற்றி பெறும்.

புத்தாண்டின் தொடக்கத்தில் குரு 9இல் நிற்கிறார். ஏப்ரல் 21 வரையிலும் தேவைகள் பூர்த்தியாகும். சுபநிகழ்வுகளால் வீடு களைகட்டும். 22.04.2023 முதல் வருடம் முடியும் வரை குரு 10ல் நிற்கிறார். வீண் பழி, விமர்சனங்கள் ஏற்படலாம். 14.04.2023 முதல் 25.08.2023 வரை மற்றும் 20.12.2023 முதல் வருடம் முடியும் வரை சனிபகவான் அஷ்டமத் துச் சனியாக வருவதால் எதிலும் பயம், போராட்டம் வந்து போகும். பணப்பற்றாக்குறை ஏற்படும்.

26.8.2023 முதல் 19.12.2023 வரை 7ல் சனி தொடர்வதால் உடல் நலனில் கவனம் தேவை. பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகள் எழும். 8.10.2023 முதல் வருடம் முடியும் வரை உங்கள் ராசிக்கு 3ல் கேதுவும், 9ல் ராகுவும் நுழைவதால், தெளிவான முடிவுகள் எடுப்பீர்கள்.

19.1.2024 முதல் 13.2.2024 வரை சுக்ரன் 6ல் மறைவதால் வேலைச்சுமை அதிகரிக்கும். கால் வலி, கழுத்து வலி, இறுமல் வந்துபோகும். கணவன்மனைவிக்குள் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். 14.3.2024 முதல் 13.4.2024 வரை ராசிக்கு 8ல் செவ்வாய் நிற்பதால் அடிக்கடி கோபப் படுவீர்கள்.

உத்தியோகத்தர்களே! ஆவணி, கார்த்திகை மாதங்களில் புது வாய்ப்புகள், பொறுப்புகள் தேடி வரும். பங்குனி மாதத்தில் பதவி உயர்வு உண்டு.

**மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு தன்னம்பிக்கையால் உங்களைச் சாதிக்கவைப்பதாக அமையும்.**

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக் கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** உறவினர்கள் வருகையால் அதிகப்படியான செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மனஸ்தாபம் ஏற்படக் கூடும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். காரியம் அனுகூலமாகும்.

**கடகம்:** உறவினர்களால் பிரச்னை ஏற்படக்கூடும். நண்பர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். செலவுகள் ஏற்படும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. முயற்சி சாதகமாக முடியும்.

**கன்னி:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்படும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர் பான முக்கிய முடிவுகளை இன்று எடுக்கலாம். செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி ஏற்படும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தி னரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டாகும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வழிபாடு நலம் சேர்க்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக் கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பலியெடுப்பில் ஆதாயம்

**2019** ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இலங்கையில் தற்கொலைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. 269 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 8 பேர் தற்கொலைதாரிகள். கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பில் உள்ள 3 தேவாலயங்கள், கொழும்பிலுள்ள 3 ஹோட்டல்கள் மற்றும் கொழும்பு தெமட்டகொடவிலுள்ள வீட்டுத் தொகுதி ஆகியவற்றில் இந்தத் தற்கொலைக்குண்டுத் தாக்குதல்கள் சில நிமிட நேர இடைவெளியில் நடத்தப்பட்டன. இது நடந்து 4 ஆண்டுகள் கடந்துவிட்டன. தாக்குதலாளிகள் உயிரிழந்துவிட்டனர். ஆனால், தாக்குதல் தொடர்பான நீதி இன்னமும் நிலைநாட்டப்படவில்லை. இந்தத் தாக்குதல் குறித்து போதிய உளவுத்துறைத் தகவல்கள், முன்னெச்சரிக்கைகளை இந்தியா வழங்கியிருந்தும் தாக்குதலைத் தடுக்கத் தவறியிருந்தது இலங்கை. இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஈஸ்டர் பெருநாள் தாக்குதலுக்கு ஒத்திகையாக மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடியில், 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி மோட்டார் சைக்கிள் ஒன்று தூரத்திலிருந்து இயக்கப்படும் கருவியால் வெடிக்கவைக்கப்பட்டது. அதன் பின்னராவது பொலிஸார் உசாரடைந்து ஈஸ்டர் தாக்குதலை தடுத்திருக்கலாம். ஆனால், அதுவும் முடியவில்லை. இவை எல்லாவற்றையும் ஒரு நேர்கோட்டில் பொருத்திப்பார்க்கும்போது இலங்கையிலுள்ள யாருடைய தேவைக்காகவோ தாக்குதல்கள் தடுக்கப்படாமல் வேடிக்கைபார்க்கப்பட்டிருக்கின்றன என்பது தெளிவாகவே தெரிகின்றன.


ஈஸ்டர் பெருநாளன்று இடம்பெற்ற தாக்குதல் காலத்தில் அரசியல் சூழல்கள் எப்படியிருந்தது என்பதைப் புரிந்துகொண்டால் இதன் பின்னால் இருந்த மறைகரம் தெளிவாகத் தெரியும். 2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவை திடுதிடுப்பென அகற்றிவிட்டு மஹிந்த ராஜபக்சவை பிரதமராக நியமித்தார். இதன் பின்னர் நீதிமன்றம் ஊடாக மைத்திரிக்கு குட்டுப் போடப்பட்டது. ரணில் விக்கிரமசிங்கவை 53 நாள்களின் பின்னர் மீண்டும் பிரதமராக வேறுவழியின்றி மைத்திரி நியமித்தார். அதேகாலப் பகுதியில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக கோத்தாபய ராஜபக்ச களமிறங்குவதற்கான ஏற்பாடுகள் பரபரப்பாக இடம்பெற்று வந்தன. பாதுகாப்பு அமைச்சின் செயலராக இருந்த கோத்தாபய முன்னாள் இராணுவ அதிகாரியும்கூட. அவராலேயே இந்த நாட்டைப் பாதுகாக்க முடியும் என்ற கோஷம் வலுப்பெற்றுக் கொண்டிருந்த காலத்திலேயே ஈஸ்டர் பெருநாள் அன்று தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன. அதன் பின்னர் கோத்தாபயவுக்கான அலை அதிகரித்தது. ஈஸ்டர் பெருநாள் தாக்குதலுக்கு நீதி கோரும் கர்தினால் மல்கம் ரஞ்சித்கூட அன்றைய சூழலில் கோத்தாபயவை மறைமுகமாக ஆதரித்திருந்தார். அன்றைய சூழலில் எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரையும் சந்திக்கத்தயாரில்லை என்று அறிக்கையிட்ட கர்தினால், கோத்தாபயவை மாத்திரம் சந்தித்திருந்தார். அவர் ஊடாக நீதி நிலைநாட்டப்படும் என்று நம்புவதாகவும் குறிப்பிட்டிருந்தார். பின்னாளில் அவரே கோத்தாபயவுக்கு எதிராகவும் திரும்பியிருந்தார் என்பது வேறுகதை.

இந்தத் தாக்குதல் தொடர்பில் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது விசாரணை அறிக்கையில் ஓர் விடயத்தைச் சுட்டிக்காட்டியது. இந்தத் தாக்குதலுக்கான சூத்திரதாரி தொடர்பில் தெளிவான அடையாளத்தை வழங்கியிருந்தது. நடைபெற்ற தாக்குதல் ஊடாக எந்தத் தரப்பு அரசியல் ஆதாயம் அடைந்ததோ அந்தத் தரப்புக்கும் தாக்குதலுக்குமான தொடர்பில் தீர விசாரிக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது. இந்தத் தாக்குதலால் முழுமையாக ஆதாயமடைந்தவர் கோத்தாபயவே. ஆனால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும்அது தொடர்பில்விசாரிக்கப்படவேயில்லை என்பதுதான் துரதிர்ஷ்டம். இலங்கையில் அதன் பின்னர் கொரோனா அலை, பொருளாதாரநெருக்கடி என்று பல்வேறு விடயங்கள் தோன்றிமறைந்துவிட்டன. ஆட்சிகளும் மாறிவிட்டன. எதிர்த் துருவங்களாக இருந்தவர்கள் இன்று ஒன்றாக ஆட்சியமைத்துள்ளனர். ஆனாலும் தாக்குதலுக்கான நீதியை நிலைநாட்ட யாராலும் முடியாமல் இருக்கின்றது. ஆட்சியாளர்களுக்கு அந்த நீதியை நிலைநாட்டவேண்டிய தேவை எதுவும் எழுந்திருக்கவில்லை என்பதே இதன் உண்மையான அர்த்தம்.

நாளொரு நல்வார்த்தை

"யாராவது உங்களை அவமானப் படுத்தினால் ஒரு அனுபவம் சேகரிக்கப்பட்டதென்று கருதுங்கள்!"

— ஸ்டான்லி ஜோன்ஸ்



# பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் சர்வதேச தராதரத்தை மீறுகிறது

## அமெரிக்கத் தூதுவர் சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஏப். 22**

**பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு தொடர்பில் விரிவான மற்றும் பொது விவாதங்கள் அவசியம் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கோரிக்கை விடுத்துள்ளார்.**

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்ததாகத் தனது ருவிற்றர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச தரத்துக்குப் புறம்பாக இந்தச் சட்டவரைவில் சில விடயதானங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

சிவில் சமூகம், கல்வியாளர்கள் மற்றும் சட்டம் இயற்றுபவர்கள் உட்பட அனைவரது கருத்துக்களும் உள்வாங்கப்பட்டு கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடல் என்பவற்றைக் கட்டுப்படுத்தாமல் - பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான சிறந்த கருவியாக - இந்தச் சட்டவரைவு செயற்படுவதை உறுதிப்படுத்துவது முக்கியமாகும்.

அதற்கமைய பொது மற்றும் நாடாளுமன்றம் ஆகிய இரண்டிலும் விரிவான விவாதங்கள் இடம்பெறவேண்டும் என வலியுறுத்தினேன் என பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-6)

# பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் மனித உரிமையைப் பறிக்காது!

## அமெ. தூதுவருக்கு நீதியமைச்சர் விளக்கம்

கொழும்பு, ஏப். 22

அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவில் மனித உரிமைகள் மீறப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் இல்லை. மக்களின் பாதுகாப்பை இந்தச் சட்டம் உறுதிப்படுத்தும் வகையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச பரிந்துரைத்துள்ளார்.

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச மற்றும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோருக்கிடையேயான சந்திப்பு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போதே அமெரிக்கத் தூதுவரிடம் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சந்திப்பின்போது, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு தொடர்பிலும் மறுசீரமைப்புக்கள் ஊடாக அடைந்துள்ள பொருளாதார முன்னேற்றங்கள் தொடர்பிலும் தூதுவருக்கு நீதியமைச்சர் விளக்கமளித்தார்.

நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்துக்குப் பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைபை அறிமுகப்படுத்துவதற்கான நோக்கம் சாதாரண மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே. மனித உரிமைகள் மீறப்படுவதற்கான சந்தர்ப்பம் இந்தச் சட்டவரைவில் நீக்கப்பட்டுள்ளது என நீதியமைச்சர் தெரிவித்தார். (ச-இ)

நாளை — 23.04.2023 ஞாயிற்றுக்கிழமை சித்திரை 10

சுபநேரம் : 09.00 - 10.30
ராகுகாலம் : 04.30 - 06.00

சதுர்த்தி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யாழ். மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும்,
ஆறுமுகம் வீதி, கிளிநொச்சி வட்டக்கச்சி, கொழும்பு வெள்ளவத்தை,
வவுனியா தோணிக்கல் ஆகிய இடங்களை வதிவிடமாகவும்,
தற்போது யாழ். கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

# காசிநாதர் சோமநாதர்

அவர்களின்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 01 . 10 . 1948



உதிர்வு 23 . 03 . 2023

குடும்பத்தின் குல விளக்காய்
பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்த எம் குல விளக்கே!
வாழ்நாள் முழுவதும் உங்களை நினைக்கும்
போதெல்லாம் உங்கள் நினைவுத் துளிகள்
விழிகளின் ஓரம் கண்ணீராய் **கரைகின்றதப்பா..!!**

**உங்களையே** உலகமென உறுதியாய் நாமிருக்க
ஏன் விண்ணுலகம் நிரந்தரமாய் **விரைந்தீரோ?**
நீங்கள் **எம்மை** விட்டுச் சென்றாலும்
ஆறவில்லை மனது
ஆண்டுகள் பல கோடி சென்றாலும் ஆறாது
ஆறாது நம் நினைவுகள்...!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!
ஓம் சாந்தி..! ஓம் சாந்தி..! ஓம் சாந்தி !

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும். தொலைபேசியூடாகவும். முகநூல். மின்னஞ்சல். RIPBOOK ஆகியவை மூலமாகவும். எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும். அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும். மலர்வளையங்கள். மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும். உற்றார். உறவினர். நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இல.05, இந்து மகளிர் லேன்,**
**பலாலிறோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

(CS/50105)AH-1

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

## பெயர் மாற்றம்

செல்வநகர் கிளிநொச்சியைச் சேர்ந்த **முருகையா விடுதலைவேந்தன்** ஆகிய நான் பெயரை **முருகையா விஜயன்** என மாற்றம் செய்து இன்று முதல் என்சார்ந்த சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை ஜனநாயக குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(cs 50111) (N-1)

**முருகையா விஜயன்**

## வீடு வாடகைக்கு

பருத்தித்துறை வீதியில்,
மந்திகை ஆஸ்பத்திரிக்கு
அண்மையில் வீடு
வாடகைக்கு உண்டு.
அரச ஊழியர்கள்
விரும்பத்தக்கது.

**076 464 4565**

(22949)AH-1

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த (25.03.2023) சனிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

## அமரர் வன்னியசிங்கம் ஜனார்த்தனன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.04.2023) சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை மறுதினம் (24.04.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**



தோற்றம் 09.06.1985


மறைவு 25.03.2023

**இலகடி, கோப்பாய் வடக்கு,**
**கோப்பாய்.**

(CS/50102)AH-1

**குடும்பத்தினர்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த (03.05.2022) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் நாகநாதி குமரையா

**(பொன்னம்பலம்) (சரவணையூர் விவசாயி)**

*திதி: திருதிகை*

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவுதின நிகழ்வு இன்று (22.04.2023) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அமைதியான புன்சிரித்த முகமும்
அயராத உழைப்பும் - உறவுகளை
ஆதரிக்கும் உள்ளமும் வளமான வாழ்வுக்கு
அன்பால் கிடைத்த வரமே
அவனியை விட்டு நீங்கி இன்றோடு
ஆண்டு ஒன்று ஆனதோ
ஆறவில்லை எம் துயர்.



நாம் வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
நினைத்துருகாத நாளில்லை
நெஞ்சில் நீங்கா நினைவுகளோடு

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்*

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

**மனைவி, மக்கள்,**
**மற்றும் குடும்பத்தினர்**

தோற்றம் 05.01.1935

மறைவு 03.05.2022

**தொடர்பு: 076 775 0179**

(cs 42747) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடமாடும் மருத்துவம்

யாழ்ப்பாணம், ஏப். 22

அரியாலை, நாவாந்துறை பிரதேசங்களில் தோல் சம்பந்தமான நடமாடும் மருத்துவ முகாம் கடந்த வாரம் சுகாதாரப் பிரிவினரால் நடத்தப்பட்டது.

அரியாலை ஜே/92, நாவாந்துறை ஜே/84 ஆகிய கிராமஅலுவலர் பிரிவுகளில் இடம்பெற்ற இந்த நடமாடும் மருத்துவ சேவையில் 200 பேர் வரை பங்கேற்றுப் பயன்பெற்றனர் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

(ச-17)



## ஏல விற்பனை அறிவித்தல்

எமது பிராந்திய பணிமனையின் கீழ் இயங்கும் வரணி பிரதேச வைத்தியசாலையில் பழைய கட்டடத்திலிருந்து கழற்றப்பட்ட கட்டடப் பொருள்கள் விசேட ஏல விற்பனை மூலம் தீர்த்தொதுக்கப்படவுள்ளது.

இவ் விசேட ஏலமானது எதிர்வரும் 25.04.2023 அன்று காலை 9.30 மணிக்கு வரணி பிரதேச வைத்தியசாலையில் நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம். பொருட்கள் பற்றிய விவரம் வைத்தியசாலையின் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**

(CR/39689)AH-1

## University of Jaffna - Sri Lanka
## Faculty of Management Studies and Commerce
## Master of Business Administration
## Intake VII - 2021/2022

The Faculty of Management Studies and Commerce of the University of Jaffna is pleased to announce the commencement of the Master of Business Administration (MBA - Intake VII) - 2021/2022 and invites applications for the admission from qualified candidates. Details of the course can be obtained from the website of the Faculty of Management Studies and Commerce: www.maco.jfn.ac.lk.

### Admission requirement

A candidate seeking admission to MBA should possess at least any one of the following qualifications and exhibit a satisfactory level of English language proficiency:

1. A Bachelor's Degree from a recognised University/ Higher Education Institution in Business/ Public Administration/ Business Management/ Commerce/ Business Administration/ Management Studies
2. A Bachelor's Degree from a recognised University/ Higher Education Institution including 30 credits in Business/ Public Administration/ Economics/ Commerce/Management studies
3. A Bachelor's Degree from a recognised University/ Higher Education Institution in any discipline
   **and**
   A Postgraduate Diploma in business/public administration//business management/ commerce/business administration/ management studies
4. A Bachelor's Degree from a recognised University/ Higher Education Institution in any discipline
   **and**
   A minimum of one-year post qualifying work experience in a management capacity at an organization acceptable to the Faculty Board and the Senate of the University of Jaffna
5. Having at least one of the approved list of professional qualifications ( for details please visit: https://www.maco.jfn.ac.lk/index.php/mba/), with a minimum of three (03) years post-qualifying work experience in a management capacity at the organization(s) acceptable to the Faculty Board and the Senate of the University of Jaffna.
6. Any other qualification/experience acceptable to the Faculty Board and the Senate of the University of Jaffna

**PROGRAMME STRUCTURE**

Duration - Two years (Four (04) Semesters)
Medium of instruction - English

**INVESTMENT**

Investment for the MBA program is Four Hundred and Fifty Thousand (LKR 450,000.00). This can be invested in two installments as given below:

| | |
|---|---|
| Application | : **LKR 2,000** |
| First Year Investment | : **LKR 250,000** |
| Second Year Investment | : **LKR 200,000** |

The closing date for application : **28.05.2023**

**APPLICATION PROCEDURE**

Online Application form, Procedure and Paying in voucher can be found from the website www.maco.jfn.ac.lk

Further information could be obtained through 021 221 6394 / 021 222 3610.

**Registrar**
**University of Jaffna, Sri Lanka**

(CR 39693)AH-1

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிறவுண் வீதியில் பல்கலைக்கழக கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள பாவிக்க முடியாத நிலையிலுள்ள கட்டிடம் மற்றும் பாவித்த கல்வனைசு தகரப்பெட்டிகள் என்பன பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஏலவிற்பனைக்குரிய கட்டிடம் மற்றும் பொருட்கள் தொடர்பான விபரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் சேவைகள் பிரிவு அலுவலகத்துடன் தொடர்புகொண்டு கீழ்குறித்த தினத்தில் காலை 10.00 மணியிலிருந்து மாலை 03.00 மணிவரை மட்டும் பார்வையிடலாம்.(தொடர்பு இலக்கம்- 021 221 8128)

| இல | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஏலப்பொருட்கள் | ஏலப்பொருட்களை பார்வையிடும் நாள் | ஏலவிற்பனை நடைபெறும் திகதி / காலம் |
|---|---|---|---|---|
| 01 | இல-354, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (பிறவுண் வீதியில் பல்கலைக்கழக கல்லூரிக்கு முன்பாக) | • பாவிக்க முடியாத நிலையிலுள்ள பழைய வீடு (கூரை தொடக்கம் நிலமட்டம் வரை)<br>• பாவித்த கல்வனைசு தகரப் பெட்டிகள் | 03.05.2023 புதன்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் மாலை 03.00 மணி வரை | 10.05.2023 புதன்கிழமை காலை 10.00 மணி |

ஏலவிற்பனையில் பாவிக்க முடியாத நிலையிலுள்ள வீடு மற்றும் பொருட்களை பார்வையிட விரும்புபவர்கள் மீளளிக்கப்படாத அனுமதிக் கட்டணமாக ரூபா 3000.00, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் 97000006000276 என்ற கணக்கிலக்கத்திற்கு நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், என்ற பெயரில் வைப்புச்செய்த பற்றுச்சீட்டுடன் ஏலப் பொருட்களை பார்வையிடலாம்.

ஏலத்தில் கலந்து கொள்ளும் ஏலதாரர்கள் 08.05.2023 திங்கட்கிழமை மாலை 03.00 மணிக்கு முன்னர் மீளளிப்பு செய்யக்கூடிய வைப்புத் தொகையாக ரூபா 100.000.00 ஐ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் 97000440002612 என்ற கணக்கிலக்கத்திற்கு நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், என்ற பெயரில் வைப்புச் செய்த பற்றுச்சீட்டினை பொதுநிர்வாகக் கிளையில் கையளித்து விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து மேற்குறித்த ஏலவிற்பனையில் கலந்து கொள்ள முடியும்.

மேற்காட்டிய திகதியில் நடைபெறும் ஏலவிற்பனையில் வெற்றியடைந்தவர்கள் ஏலத்திற்குரிய தொகையின்னை யாழ்ப்பாண பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் 97000440001846 என்ற கணக்கிலக்கத்திற்கு பணமாக உடன் செலுத்தி குறித்தொதுக்கப்பட்ட தினங்களுக்குள் ஏலவிற்பனை நிபந்தனைகளுக்கமைவாக வீட்டினையும் பொருட்களையும் அகற்றுதல் வேண்டும்.

**குறிப்பு: மீளளிப்புச்செய்யக்கூடிய தொகையை செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றவர்கள் மாத்திரமே ஏலவிற்பனையில் கலந்து கொள்ள முடியும் என்பதையும் அறியத்தருகின்றோம்.**

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

(CR/39694)AH



## மரண அறிவித்தல்

பிறப்பு 24 • 10 • 1987



இறப்பு 21 • 04 • 2023

## தியாகராஜா திருவரங்கன்

பண்டத்தரிப்பு வடலியடைப்பை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தியாகராஜா திருவரங்கன் நேற்று (21.04.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தியாகராஜா சுதந்திராதேவி தம்பதியரின் அன்பு மகனும், சுவாமிநாதன் காலஞ்சென்ற விமலா தம்பதியரின் அன்பு மருமகனும், சுவேதிகாவின் அன்புக் கணவரும், ஆழினியின் அன்புத் தந்தையும், தர்மேந்திரா, யாழரசி, எழிலரசி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகித்தா, சஞ்சீவன், வாகீசன், கஜன், றூபி, கோபிகா, ஜெகநிவாசன் ஆகியோரின் மைத்துனரும் ஸ்ராவ்யா, விதுன்ஜெய், விவின்ஜெய் ஆகியோரின் சிறியதந்தையும், தனீஷா, வர்ணீஷா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"சுதந்திரவாசகம்"**
**அரசடி வீதி, பண்டத்தரிப்பு,**
[illegible] - 077 136 9557
077 610 6383

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs24542) (N-1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இளையோர் மேம்பாட்டுக்கு மன்னாரில் தொழிற்சந்தை

மன்னார், ஏப். 22

மன்னார் மாவட்டத்தில் இளைஞர், யுவதிகளின் எதிர்காலத்தை மேம்படுத்தும் முகமாக எதிர்வரும் 26ஆம் திகதி மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் தொழிற்சந்தை நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பில் மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளதாவது:

எமது மாவட்டத்தில் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தவர்கள் மற்றும் பாடசாலையிலிருந்து இடைவிலகியவர்கள் தமது திறன்களை அடையாளம் கண்டு அதனூடாக தமக்குப் பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான முன்னெடுப்புக்கள் இடம்பெறவுள்ளன.

இந்தத் தொழில் சந்தை, அவர்களின் திறன்கள் அடையாளம் காணப்பட்டு அதற்கான வழிகாட்டலூடாக ஒவ்வொருவரும் உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள அரிய சந்தர்ப்பமாக அமையும்.

அத்துடன் உயர் கல்வியினூடாகத் தமது எதிர்காலத்தை வளப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ள இளையோர் தமது உயர்கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான தளமாகவும் இது இருக்கும்.

நிகழ்வில் 40க்கும் மேற்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு மற்றும் உயர்கல்வி வழங்கும் நிறுவனங்கள், பயிற்சி வழங்கும் நிறுவனங்கள், வியாபார ஊக்குவிப்பு செயற்பாடுகளுடன் தொடர்புடைய நிறுவனங்கள் பங்கேற்கவுள்ளன - என்றார். (ச-60)


## வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவம் உள்ள ஆண், பெண் வேலையாட்கள் தேவை.

1). விற்பனையாளர் 2) சிட்டை எழுதுனர்
3) காசாளர் (பெண்) 4) வரவேற்பாளர்

குறிப்பு: யாழ். பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
0777 488 093, 074 073 4830

(CR 39697)A-1


## மரண அறிவித்தல்



பிறப்பு 22 . 11 . 1962 — இறப்பு 20 . 04 . 2023

### வைத்தியநாதக் குருக்கள் சிவகாமிபிள்ளை (சுசி)

கல்வளவு, கரணவாயைச் சேர்ந்த வைத்தியநாதக் குருக்கள் சிவகாமி பிள்ளை (சுசி கடந்த (20.04.2023) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருஞானசம்பந்தக் குருக்கள்-வள்ளியம்மை தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான தியாகராஜக் குருக்கள் - ஞானகமலாம்பிகை அம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், தி.வைத்தியநாதக் குருக்களின் அன்பு மனைவியும், பி.சவிதா (லண்டன்), வை.பிரியங்கா (பிரதேச செயலகம் - கரவெட்டி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரசாத்தின் மாமியும், பி.அக்ஷை, பி.அக்ஷரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற தி.சௌதாமலர், வே. புனிதவதி, சி. மங்கையற்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செ. விசாலாட்சியம்மா, ந. புவனேஸ்வரியம்மா மற்றும் தி. சுப்பிரமணியக் குருக்கள், சு. இராஜேஸ்வரி, பி. புஸ்பராணி, தி.செவ்வந்தி நாதக் குருக்கள் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.04.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30-மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (கல்வளவு, கரணவாய், வேதாரணியேஸ்வரா பாடசாலை அருகில்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 114 9295 (22950)AH-1

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் தேவராசா

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும், தற்போது பிரான்சில் வசித்துவந்தவருமாகிய ஆறுமுகம் தேவராசா கடந்த 20.04.2023 பிரான்சில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லப்பா பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், சண்பகாவதியின் (இராசாத்தி) ஆருயிர்க் கணவரும், சுமதி, சுரேந்திரன், சுவேந்திரன், சுமந்திரன், சுகுனேந்திரன், சிந்து ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற வரதராஜன் (வரதன்) மற்றும் கோமளா, அருந்ததி, பிரசன்னா, இந்துசா, டயகினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற தியாகராசா (சோதி), சுந்தரலிங்கம் (கண்ணன்) ஆகியோரின் சகோதரரும், இந்திராணி, காலஞ்சென்ற கமலரெட்ணாவதி, நாகராசா மற்றும் சரஸ்வதி, தம்பிராசா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (27.04.2023) வியாழக்கிழமை பிரான்சில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இல.51,B.A. தம்பி லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொ.பே:077 510 2531

தகவல்: பெறாமகள்
பவானி தயாபரநாதன்

(CS 24550) A-1

## மரண அறிவித்தல்



### திருமதி செபமாலை பூரணம்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் ஊர்காவற்றுறை மற்றும் மல்லாவி அனிஞ்சியன் குளத்தை வதிவிடமாகக் கொண்ட திருமதி செபமாலை பூரணம் நேற்று (21.04.2023) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் அமரர் திரு. செபமாலை அவர்களின் அன்பு மனைவியும், தவராசா (ஓய்வுபெற்ற முகாமைத்துவ உதவியாளர் - பிரதேச செயலகம், துணுக்காய்), காலஞ்சென்ற மரிசலினா, சகாயராணி, யேசுமலர், தேவமனோகரி, சிந்துஜன் (உத்தியோகத்தர் பிரதேசசபை துணுக்காய்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தவராசா (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், பிரதேசசபை, துணுக்காய்), குணசீலன் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், அரசினர் வைத்தியசாலை, மன்னார்), குமார் (உத்தியோகத்தர், பிரதேசசபை துணுக்காய்), சடகோபன் (உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம் கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 6737098

(CR 39698)A-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 05 . 08 . 1949 — மறைவு 21 . 04 . 2023

### இரத்தினம் செல்வராசா

ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் 3ஆம் ஒழுங்கை, அரசடி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் செல்வராசா நேற்று (21.04.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம் சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஈஸ்வரி (ரோகினி) அவர்களின் பாசமிகு கணவரும், ஜெசிந்ததாஸ் (பிரான்ஸ்), துசிந்ததாஸ் (துர்க்கா, யாழ். மாநகர சபை), துஸ்யந்தினி (பிரான்ஸ்), விபில்தாஸ், தட்சாயினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரியா (பிரான்ஸ்), நளினிகா (அஞ்சா), குருநீலன் (நீலன்-பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், கமலவதனி (பிரான்ஸ்), இன்பவதனி, காலஞ்சென்றவர்களான யோகவதனி, நிர்மலா மற்றும் சியாமளா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், நல்லதம்பி, டேவிற், பற்குணராசா மற்றும் ஆனந்தன் (பிரான்ஸ்), அமுதராசா, வனிதா ஆகியோரின் மைத்துனரும், ஷாய்கன் (பிரான்ஸ்), ஜெர்சன் (பிரான்ஸ்), ரோகிதா (பிரான்ஸ்), அனஞ்சா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 356 5285


(CS 24548) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நீர் நெருக்கடியில் வடக்கு மாகாணம்

கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா
முதுநிலை விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

உலகளாவிய ரீதியில் புவி தினம் இன்று கடைப்பிடிக்கப்படுகின்றது. சில விடயங்களின் சிறப்பு மற்றும் முக்கியத்துவம் கருதி அவற்றுக்கென ஒரு நாளை பிரகடனப் படுத்துவது வழமையாகும். அந்த அடிப்படையில் நாம் வாழ்வதற்கான அத்தனை வளங்களையும் தந்த பூமியை கௌரவிக்க வேண்டும் என்பதற்காகவும், பூமியை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவும் புவி தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு கருப்பொருளின் கீழ் புவிதினம் கொண்டாடப்படுவது போல் இவ்வாண்டும் 'எங்கள் கோளத்தில் முதலீடு செய்வோம்' என்ற தொனிப்பொருளின் அடிப்படையில் உலகளாவிய புவி தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. உலகளாவிய ரீதியில் பல்வேறு வகைப்பட்ட முயற்சிகள் பூமியை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டாலும்கூட இன்று வரை மனிதர்களது சுயநலமான செயற்பாட்டினாலும் பூமியின் சீரான இயக்கத்தின் முக்கியத்துவத்தையும் அதன் அருமை பெருமைகளை அறிந்து கொள்ளாமல் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு வகைப்பட்ட செயற்பாடுகளின் விளைவாக பூமியினுடைய பல்வகைப்பட்ட இயற்கையான அம்சங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பூமி இயற்கையாகவே தன்னை மாற்றிக் கொள்ளும்



அயன இடை ஒருங்கல் வலயத்தின் பரம்பல்




தன்மை வாய்ந்தது. இந்த இயற்கை மாற்றங்களை பூமி தன்னுடைய அடுத்த கட்ட இயக்கத்தினை மேற்கொள்வதற்காகச் செய்கின்றது. ஆனால் மனிதனது செயற்பாடுகளின் விளைவாக பூமியில் உருவாக்கப்படுகின்ற மாற்றங்கள் என்பவை மிகக் குறுகிய காலத்தில் பூமியின் இயல்பான இயக்கத்தையும் அதன் இயல்பான செயற்பாடுகளையும் பாதிக்கின்ற வகையில் அமைந்திருக்கின்றன. மனிதனது செயற்பாடுகளின் விளைவாக உருவாக்கப்பட்ட பல்வேறு வகைப்பட்ட பாதிப்புக்களினால் மனிதனே பாதிக்கப்படுகின்ற நிலைமை காணப்படுகின்றது. இன்று பூமி எதிர்கொள்கின்ற மிக முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாக காலநிலை மாற்றம் உள்ளது. குறிப்பிட்ட காலம் வரைக்கும் கோட்பாட்டு அடிப்படையில் அல்லது கருத்தியல் அடிப்படையில் பூகோள ரீதியான பிரச்சினையாகக் கருதப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் இன்று எமது பிரதேசத்துக்கும் ஏற்பட்டிருக்கின்ற அளவிற்கு மனித சமூகம் இந்தப் பூமி மீது அதிகளவிலான பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கின்றது.


## நெருக்கடியில் வடக்கு

அந்த அடிப்படையில் பூகோள ரீதியிலான காலநிலை மாற்றம் என்பது எமக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக மாறியிருக்கின்றது. இன்று இலங்கையினுடைய பல பகுதிகள் காலநிலை மாற்றம் காரணமாக பல்வேறு வகைப்பட்ட பாதிப்புகளை எதிர் கொண்டிருக்கின்றன. வடக்கு மாகாணம் காலநிலை மாற்றத்தின் காரணமாக மிகப்பெரிய அச்சுறுத்தலை எதிர்கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு எமது வட மாகாணத்தை பொறுத்தவரை எல் நினோ ஆண்டாகக் காணப்படுகின்றது. பொதுவாக எல் நினோ என்பது அதிக அளவிலான வெப்பம் சார்ந்த வானிலையோடு தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது. லா நினோ என்பது வளிமண்டல வெப்பநிலை குறைவு அல்லது அதிகளவான மழை வீழ்ச்சி என்பதோடு தொடர்பானதாகக் காணப்படுகின்றது. எல் நினோவின் செல்வாக்கு உள்ள பிரதேசங்களில் சமுத்திர வெப்பநிலை அதிகரித்துக் காணப்படும். அதன் விளைவாக அந்த சமுத்திரப் பகுதிகளை அண்மித்திருக்கின்ற நிலப்பகுதிகளிலும் உயர்கின்ற வெப்பநிலையின் விளைவாகவும் குறிப்பிட்ட பிரதேசம் மிகவும் வறட்சியான வானிலையை எதிர்கொள்ளும். கடந்த 60 ஆண்டுகளாக எல் நினோ ஆண்டுகள் என்று வரையறுக்கப்பட்ட ஆண்டுகளில் எங்களுடைய வடக்கு மாகாணம் மழைவீழ்ச்சி பற்றாக்குறையையும் மிக அதிக அளவில் வெப்பநிலையும் அதனால் மிக அதிக அளவிலான ஆவியாக்கத்தையும் அதன் தொடர் விளைவாக நீர் பற்றாக் குறையையும் எதிர்கொண்டு வந்துள்ளது. அந்த அடிப்படையில் 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீண்டும் 2023 ஆம் ஆண்டு எல் நினோ ஆண்டாக காணப்படுகின்றது. இன்னொரு வகையில் கூறுவதானால் இவ்வாண்டு வடக்கு மாகாணத்தினுடைய வானிலை வரண்டதாகவும் மழைவீழ்ச்சி குறைவானதாகவும் அதிக வெப்பத்தின் விளைவான தொடர்ச்சியான பாதிப்புகளை எதிர்கொள்கின்ற நிலைமையையும் காணமுடியும்.

அத்தோடு இந்த ஆண்டு இந்து சமுத்திர வெப்பநிலையின் அளவைக் குறிப்பிடுகின்ற இந்து சமுத்திர சுட்டெண்ணும் நேர்மறையான பெறுமானத்திலே காணப்படுகின்றது. பொதுவாக இந்து சமுத்திர வெப்பச் சுட்டெண் நேர் பெறுமானத்தில் காணப்படுகின்ற பொழுது அதனைச் சூழ உள்ள பிரதேசங்கள் மிக உயர்வான வெப்பநிலையையும் அதனோடு இணைந்ததான வரண்ட வானிலையையும் எதிர்கொள்வது வழமையாகும். பொதுவாக இந்து சமுத்திர வெப்ப சுட்டெண்ணை பொறுத்தவரையில் இவ்வாண்டு வங்காள விரிகுடாவினுடைய இந்து சமுத்திர வெப்பச் சுட்டெண்ணும் அரபிக் கடலின் உடைய வெப்பச் சுட்டெண்ணும் நேர் பெறுமானத்தில் இருப்பதன் காரணமாக இவ்வாண்டு நாம் சராசரியோடு ஒப்பிடுகின்ற பொழுது குறைவான மழை வீழ்ச்சியை பெறுவோம் என்பதோடு இவ்வாண்டு முழுவதும் பெருமளவுக்கு வெப்பமான, வரண்ட வானிலைப் பண்புகளையும் நாங்கள் எதிர்கொள்வதற்கான சாத்திய நிலைமைகளே காணப்படுகின்றன.

ஆகவே இந்த ஆண்டு வழமையை விடவும் வெப்பநிலை உயர்வாக இருக்கும் என்பது எல் நினோ வின் தன்மையினாலும் இந்து சமுத்திர வெப்ப சுட்டெண்ணின் நேர் பெறுமானத்தாலும் அறிய முடிகின்றது. அதற்கு ஏற்றாற் போல இந்த ஆண்டு எங்களுடைய மழை வீழ்ச்சிக் கோலமும் மாறியுள்ளது. எங்களுடைய பிரதேசத்தில் அதாவது வடக்கு மாகாணத்தில் சராசரியாக ஏப்ரல் மாதம் இருபதாம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 225 மில்லிமீற்றருக்கு மேற்பட்ட மழை சராசரியாக கிடைப்பது உண்டு. ஆனால் இவ்வாண்டு வடக்கு மாகாணத்தில் சராசரி மழைவீழ்ச்சியாக 82 மில்லிமீற்றர் என்ற அளவிலேயே மழை கிடைத்துள்ளது. சில பிரதேசங்களில் இந்த 82 மில்லிமீற்றர் என்ற சராசரியை விட சற்று உயர்வான மழை கிடைத்திருந்தபோதும் பல பிரதேசங்களில் இதற்கு குறைவாகவே மழை கிடைத்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் எங்களுடைய மக்களின் உள்ளூர் அறிவின் பிரகாரம் சித்திரை மாதம் சித்திரை குழப்பம் அல்லது சிறு மாரி என அழைப்பது வழக்கம். இதற்கு ஏற்றாற் போல் 'சித்திரை ஒரு சிறு மாரி' என்ற பழமொழியும் காணப்படுகின்றது.

சித்திரை மாதத்தின் முதல் வாரத்தில் இருந்து மூன்றாவது வாரத்திற்கிடையில் ஒரு குறிப்பிட்ட அளவிலான மழை அதாவது சராசரியாக 150 மில்லிமீற்றருக்கு மேற்பட்ட மழை கிடைப்பதுண்டு. இதற்கான காரணம் அயன இடை ஒருங்கல் வலயத்தின் விரிவு காரணமாக ஏற்படுகின்ற கடும் வெப்பநிலை எங்களுடைய பிரதேசத்தில் மூன்று அல்லது நான்கு நாள்களுக்கு தொடர்ச்சியாக மழை வாய்ப்பை ஏற்படுத்துவதுண்டு. ஆனால் இவ்வாண்டு அயன இடை ஒருங்கல் வலயம் ஏற்பட்டு இரண்டு வாரங்களுக்கு மேற்பட்டும்கூட இன்று வரை சித்திரை குழப்பத்திற்குரிய மழை கிடைக்கவில்லை. சித்திரை 21 ஆம், 22 ஆம் திகதிகளில் பரவலாக குறிப்பிட்ட அளவில் வெப்ப சலன அல்லது மேற்காவுகை செயற்பாடு காரணமாக சிறிய அளவில் மழை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை இம்மாதம் 28 ஆம் திகதியளவில் மேடன் யூலியன் அலைகள் இந்து சமுத்திரத்தின் வங்காள விரிகுடாப் பகுதிக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு வந்தால் ஏப்ரல் மாதத்தின் பிற்பகுதி முதல் மே மாதத்தின் முற்பகுதி வரை வடக்கு மாகாணத்திற்கு பரவலாக மேற்காவுகை



இந்து சமுத்திர வெப்பச் சுட்டெண்ணின் நேர்மறை பெறுமான விளைவு

மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. இது சில சமயம் சித்திரைக் குழப்பமாக அமையவும் வாய்ப்புண்டு. அவ்வாறு நிகழ்ந்தால் அது எங்கள் நிலைமையைக் கருத்திற் கொண்டு கடவுள் எங்களுக்கு அளித்த வரமாகவே கருதலாம்.

வடமாகாணத்தினுடைய தரை மேற்பரப்பு நீர் வளமும் தரைக்கீழ் நீர் வளமும் எமக்கு கிடைக்கின்ற மழை வீழ்ச்சியிலேயே தங்கியுள்ளது. எனவே வடக்கு மாகாணத்தின் அனைத்து தரப்பினரும் ஏற்படவிருக்கும் வரட்சி தொடர்பாக விழிப்படைய வேண்டும். எங்களுடைய மாகாணத்தின் நிர்வாக உயர் பதவிகளில் உள்ளோரும், கொள்கை வகுப்பாளர்களும், அரசியல்வாதிகளும், பொதுமக்களும் இந்த நிலைமை தொடர்பில் மிகக் கூடிய அளவு கரிசனம் செலுத்த வேண்டும். எதிர்காலத்தில் அதாவது எதிர்வரும் ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் நாம் மிகப்பெரிய அளவிலான நீர் நெருக்கடியை எதிர்கொள்வோம் என்பதை முன்கூட்டியே உணர்ந்து அதற்குரிய செயற்பாடுகளை நாம் மேற்கொள்ள வேண்டும். இருக்கின்ற நீர் வளத்தையாவது மிகச் சிறப்பாக பாதுகாப்பதற்கும் உத்தமமாக பயன்படுத்துவதற்குமான நிலைமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். எங்களுடைய பிரதேசத்தின் மாறிவரும் காலநிலையை ஒவ்வொரு தனி மனிதர்களும் உணர்ந்து அதற்கு ஏற்றால் போல் எம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். இந்த விடயங்களை நாம் கவனத்தில் கொள்ளாது அலட்சியமாக இருந்தால் எங்களுடைய பிரதேசத்தில் ஒரு மிகப்பெரிய நெருக்கடியாக நீர் பிரச்சினை எதிர்வரும் ஜூலை, ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் உருவெடுக்கும். இது தொடர்பான விழிப்புணர்வை எங்கள் மாகாணத்தில் அல்லது எங்களுடைய பிராந்தியத்தில் இருக்கின்ற ஒவ்வொரு தனி மனிதருக்கும் ஏற்படுத்துவதன் ஊடாக நாம் மிகப்பெரிய அனர்த்தத்திலிருந்து ஓரளவுக்கேனும் எம்மைத் தற்காத்துக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைதராபாத்தை நேற்று தோற்கடித்தது சென்னை



சென்னை, ஏப். 22

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் 7 இலக்குகளால் ஹைதராபாத்தை மிகமிக இலகுவாக வீழ்த்தியது சென்னை சுப்பர் கிங்ஸ்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணிக்கு சென்னை அணியின் பவர்பிளே பந்துவீச்சாளர்களாக ஆகாஷ் சிங், தேஷ்பாண்டே இருவரும் நெருக்கடியை வழங்கினார்கள். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட புரூக் 18 ஓட்டங்களுடன் ஆகாஷால் வீழ்த்தப்பட்டார். அதன் பின்னர் ஜடேஜா சுழல்வித்தையைக் காட்டினார். அபிசேக் சர்மா, திரிபதி, மயங்க் அகர்வால் ஆகிய முக்கியமான வீரர்களை வீழ்த்தினார். இளம் வீரர் பதிரண 4 ஓவர்களில் 22 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்தார். முடிவில் ஹைதராபாத் அணியால் 7 இலக்குகள் இழப்புக்கு 134 ஓட்டங்களையே பெற முடிந்தது.

பதிலுக்குக் களமிறங்கிய சென்னை அணிக்கு அதன் ஆரம்ப வீரர்களான ஹெய்க்வாட், கொன்வே இணையே வெற்றிக்கான அடித்தளத்தை பலமாக அமைத்துக்கொடுத்தது. 10 ஓவர்களில் 80 ஓட்டங்களை இலக்குச் சரிவில்லாமல் கடந்தது சென்னை. அணி 87 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 35 ஓட்டங்களுடன் ரண்அவுட் ஆனார் ஹெய்க்வாட். எனினும் கொன்வே அரைச்சதம் கடந்து அற்புதமாக விளையாடினார். அவர் 77 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதிருக்க முடிவில் 7 இலக்குகளால் வென்றது சென்னை சுப்பர் கிங்ஸ். (ம)


## தேவை

சாரதி, களஞ்சிய காப்பாளர் தேவை.

இல.15,4வது ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

தொடர்பு: 077 77 222 15

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகர், நல்லூர், கச்சேரி, அரியாலை போன்ற பிரதேசங்களில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 8395 849

## வீட்டுப் பணிப்பெண் தேவை

கொழும்பில் வசிக்கும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த தமிழ்க் குடும்பம் ஒன்றுக்கு வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவைப்படு கின்றார். ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். உணவு, தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.

தொடர்பு: 077 3866 250

## வீடு வாடகைக்கு

586, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடப் பகுதியில் வீடு
வாடகைக்கு உண்டு.

077 12 972 09

(CS 24549)A-1

## மஹோற்சவ உபயகாரர் கூட்டம்

அன்புடையீர்!

அளவெட்டி, குப்பிழாவளைப் பிள்ளையார் கோவில் மஹோற்சவம் **24.05.2023** ஆரம்பிப்பதை யொட்டி திருவிழா உபயகார்ர் கூட்டம் **07.05.2023 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆலய முன்றலில் இடம்பெறும்.** அனைத்து உபயகாரரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

(CS/50106)AH-1

**தர்மகர்த்தாக்கள் சபை,**
**அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்**

## சேவை நலன் பாராட்டு




எமது வித்தியாலயத்தில் ஆரம்பப் பிரிவு ஆசிரியராகவும்,
பகுதித் தலைவராகவும் கடமையாற்றி சிறப்பான
சேவையினை நல்கி ஓய்வு பெற்று செல்லுகின்ற

**திருமதி ஸ்ரீகௌரி குமணன்**

அவர்கள் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**ஆசிரியர் [illegible]**
**யா/மூளாய் சைவ பிரகாச வித்தியாலயம்.**

(CR 39701)A-1

## வேலையாட்கள் தேவை

பின்வரும் வேலைக்கு அனுபவம் உள்ளவர்கள் தேவை.

1) கொங்கிரிட் கல் அறுவை
2) பூச்சாடிகள் 3) அலங்கார கற்கள்
4) நிலப்பதிப்பு கற்கள்

தொடர்பு: 077 457 3580

## பணிப்பெண் தேவை

திருநெல்வேலிச் சந்திக்கருகாமையில் உள்ள வீடொன்றில் பணிகளை மேற்கொள்ளப் பணிப்பெண் தேவை.

077 069 8105

(CS 50079)(N-1)


## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 . 02 . 1939 | 21 . 04 . 2023 |

### செல்வி அமிர்தலிங்கம் பவளமலர்

உரும்பிராய் தெற்கை பிறப்பிடமாகவும் திருநெல்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அமிர்தலிங்கம் பவளமலர் அவர்கள் நேற்று (21.04.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம் நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான எஸ்.தவமலர், தி. பொன்மலர் மற்றும் அ. சிவலிங்கநாதன் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ( 22.04.2023 ) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**அ.சிவலிங்கநாதன்**
Retired Cashier Jaffna
Co-Op-Stores (Ltd).

(CR 39657)A-1

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 01 . 07 . 1969 | 21 . 04 . 2023 |

### ஞானசேகரம் கணேசலிங்கம்

தாவளை, இயற்றாலை, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும், 1ஆம் கட்டை வீதி, கிராம்புவில், சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட ஞானசேகரம் - கணேசலிங்கம் (குழு முகாமையாளர், AIA இன்சூரன்ஸ், யாழ்ப்பாணம்) அவர்கள் நேற்று (21.04.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானசேகரம் - இராசமணி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற கார்த்திகேசு மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், செல்வராணியின் (ஆசிரியை, யா/ மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்) கணவரும், அபிவாணியின் (மாணவி, தரம் -11, யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி) தந்தையும், செல்வநாயகம், கலாவதி, மகேஸ்வரன், கலைச்செல்வி, ஞானச்சந்திரன், வளர்மதி ஆகியோரின் சகோதரனும், சந்திரசேகரம், மங்கையற்கரசி, குணசேகரம், சிவராசா, பிரபாகரன், ஜெயசீலன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**1ஆம் கட்டை வீதி,**
**சாவகச்சேரி வடக்கு,**
**கிராம்புவில்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 129 8324**
**077 13710 97**

(CR 39700)A-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கொய்யாத்தோட்டத்தில் இன்று குருதிக் கொடை!

யாழ்ப்பாணம், ஏப். 22

கொய்யாத்தோட்டம் இளைஞர் நற்பணிமன்றத்தின் மூன்றாவது வருட நிறைவை முன்னிட்டு, அந்த அமைப்பின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாமொன்று இன்று இடம்பெறவுள்ளது.

கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இன்று காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை இந்த குருதிக்கொடை முகாம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

## தாயகத்தில்...

இது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியன இணைந்து விடுத்துள்ள கூட்டறிக்கையில் உள்ளதாவது:-

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பவுள்ள நிலையில், எமது இனத்துக்கு அது ஏற்படுத்தக்கூடிய கடுமையான விளைவுகளைக் கருத்திற்கொண்டு அந்தச் சட்டவரைவுக்கு எமது எதிர்ப்பைப் பதிவுசெய்கின்றோம். எமது இனத்தின் இருப்பைக் கேள்விக்குறியாக்கும் வகையிலும், எமது சுயநிர்ணய உரிமையை நீர்த்துப்போகச் செய்யும் வகையிலும் தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படும் நில அபகரிப்பு, சிங்களக் குடியேற்றங்கள் மூலம் குடிப்பரம்பலைச் சிதைக்கும் செயற்பாடு, எமது தொன்மையை நிரூபிக்கும் சான்றுகளை அழித்தல், சைவ ஆலயங்களை இடித்தழித்தல், அங்கு பௌத்த கட்டுமானங்களை வலிந்து ஏற்படுத்தல் உள்ளிட்ட செயற்பாடுகளை எதிர்த்தும் அரசியல் கட்சிகள், மத அமைப்புக்கள், பொதுக்கட்டமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் ஒன்றிணைந்து எதிர்வரும் 25ஆம் திகதி அழைப்பு விடுத்துள்ள கதவடைப்புப் போராட்டத்துக்கு ஆதரவைத் தெரிவிக்கின்றோம். அத்துடன், இதற்கு மக்களின் முழுமையான ஆதரவையும் கோரிநிற்கின்றோம் - என்றுள்ளது. (அ-ம)

## துப்பாக்கி...

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸாரும் சிறப்பு அதிரடிப் படையினரும் மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து மூன்று உள்ளூர்த் துப்பாக்கிகள் மற்றும் அவற்றின் உதிரிப்பாகங்கள் என்பன மீட்கப்பட்டன. சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-113)

## ஒரே இரவில்...

அருகாமைப் பகுதிகளில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் குறித்து உடன் தகவல் வழங்கியபோதும் வட்டுக்கோட்டைப் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து நடவடிக்கை எடுக்கவில்லை என பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் பொல்லுகள், கம்பிகள், தடிகள் என்பவற்றுடன் முகத்தை துணியால் மறைத்தபடி சுமார் 75 பேர் அடங்கிய வன்முறைக் கும்பல் ஆலய வளாகத்தில் நின்ற இளைஞர்களை தாக்கியதுடன் பிள்ளையார் ஆலயப் பூசகரது வீட்டுக்கு கல்லால் எறிந்து சேதப்படுத்தியது. பூசகர் வீட்டைத் தொடர்ந்து அருகிலுள்ள மற்றுமொரு வீட்டினுள் புகுந்து முன்புறம் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை அடித்து நொறுக்கி முன்கதவைச் சேதமாக்கியுள்ளது. பின் அராலி பிரதான வீதியிலுள்ள வீடொன்றினுள் நுழைந்து பெண்ணொருவர் உட்பட ஏனையவர்களைக் காயப்படுத்தியதுடன் அங்கிருந்து புறப்பட்டு துவிச்சக்கரவண்டித் திருத்தகமொன்றை சேதமாக்கியுள்ளது. பின்பு அருகிலுள்ள வயோதிபர் இருவர் வசிக்கும் வீட்டின் கேற் மற்றும் மின்குமிழ்களை சேதப்படுத்தி அட்டூழியம் புரிந்துள்ளது. அடுத்து இன்னொரு வீட்டினுள் நுழைந்து ஜன்னல்கள், கதிரைகளை உடைத்து வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளை எடுத்துக்கொண்டு வன்முறைக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது.

இந்தக் காடையர்கள், முதலாவது தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டபோதே பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது. ஆயினும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு உடனடியாக வரவில்லை. இரண்டு மணிநேரத்தின் பின்பே வந்தனர். பொலிஸாரின் இந்த அசமந்தத்தால் பொருட்சேதம் ஏற்பட்டுள்ளதுடன் உயிரச்சமும் ஏற்பட்டுள்ளது என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கேட்டபோது, நேற்றிரவே சம்பவ இடத்துக்கு விரைந்தோம். விசாரணைகளை ஆரம்பித்தோம். இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. முதற்கட்ட விசாரணையில் இருபகுதி இளைஞர்களிடையான முன்பகை காரணமாக இந்தத் தாக்குதல் சம்பவம் நிகழ்ந்துள்ளது எனத் தெரிவித்தார். (அ-ச-125)

## ஹெரோய்னுடன்...

வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று ஊர்காவற்றுறை பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை சுருவில் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான வகையில் நடமாடிய ஒருவரைச் சோதனையிட்டபோதே அவரிடமிருந்து ஹெரோய்ன் மீட்கப்பட்டதுடன், சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று ஊர்காவற்றுறை பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (அ-ம-125)

## விடைத்தாள்...

திருத்தும் பணிகளில் இருந்து விலகியிருந்தனர். இந்த நிலையில், மாணவர்களைப் பயணக்கைதிகளாக்கப் பயன்படுத்த முடியாது என்றும், விரைவில் கல்வித்துறையை அத்தியாவசிய சேவையாக அறிவித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். ஜனாதிபதியின் கருத்துக்கு அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஆதரவைத் தெரிவித்தனர். இந்தப் பின்னணியிலேயே விடைத்தாள் திருத்தும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், குருநாகல், கம்பஹா, கொழும்பு, களுத்துறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலேயே நேற்று முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-ம)

## பயங்கரவாத...

படுவதில் தாமதம் ஏற்படக்கூடும் என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே எஸ்.பி.திஸநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு இன்னமும் முன்வைக்கப்படவில்லை. எது எப்படி இருந்தாலும் பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டு மக்களையும், நாட்டின் வளங்களையும், ஜனநாயகத் தன்மையையும் பாதுகாக்கும் வகையிலான சட்டவரைவுக்கே பெரமுன ஆதரவு வழங்கும். ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல் என்று கருதப்படும் எந்தவொரு விடயத்துக்கும் பெரமுன ஆதரவு வழங்காது. மேற்படி சட்டவரைவு தொடர்பில் சிவில் அமைப்புக்கள் மற்றும் எதிரணிகளுடன் கலந்துரையாடல்கள் அவசியம். எனக்குத் தெரிந்த வகையில் இந்தச் சட்டவரைவு முன்வைக்கப்படுவதற்குத் தாமதமாகும் - என்றார். (அ-ம-44)

## யாழ்...

கப்பட்டது. தாக்குதல் நடத்தப்பட்ட நேரமான 8.42 மணிக்கு தேவாலய மணி ஒலிக்க விடப்பட்டு, இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டு ஈகச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. நினைவேந்தலில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர், கத்தோலிக்க மதத் தலைவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர். நினைவேந்தல் நிகழ்வின் ஒரு பகுதியாக, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு நீதிகோரி கவனவீர்ப்புப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

**பல்கலையில் அஞ்சலி**

உயிர்த்தஞாயிறுத் தாக்குதலில் உயிரிழந்தோருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் நேற்று அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் சில்வெஸ்டார் ஜெல்சின் தலைமையில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. உயிர்நீத்த உறவுகளின் நினைவுருவப் படத்தின் முன்பாக ஒருநிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டு, ஈகச்சுடரேற்றப்பட்டு, மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ-ம-125)

## முல்லையில்...

கன்ரர் வாகனமும் மோட்டார்சைக்கிளும் விபத்துக்குள்ளானதிலேயே இந்த இறப்புச் சம்பவித்துள்ளது. விபத்தை அடுத்து மோட்டார்சைக்கிள் தீப்பற்றி எரிந்துள்ளது. காயமடைந்த குடும்பத்தலைவர் புதுக்குடியிருப்பு ஆதாரமருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். கன்ரர் வாகனத்தின் சாரதி புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-19)

## வவுனியாவில்...

தி்லுள்ள தோட்டமொன்றில் அறுவடைக்கு சில நாள்களே இருந்த நிலையில் ஆயிரத்து 700க்கும் மேற்பட்ட பப்பாசி மரங்கள் காற்றால் முறிந்து வீழ்ந்துள்ளன. அத்துடன் ஓலுமடு கிராம அலுவலர் பிரிவிலுள்ள தோட்டங்களிலுள்ள வாழ்வாதாரப் பயிர்களும் கடும் காற்று மற்றும் மழையுடனான கால நிலையால் அழிவடைந்துள்ளன. இதனால் தமக்கு பல ஆயிரம் ரூபா வாழ்வாதார இழப்பு ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-ச-110)

## போதை...

லேயே அவர்கள் மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 'கைதானவர்கள் 23, 24 மற்றும் 27 வயதுடையவர்கள். நகரப்பகுதியில் பழவியாபாரத்தில் ஈடுபட்டு வருபவர்கள். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன' என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-ம-26)


# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

பிறப்பு 16 • 02 • 1939



இறப்பு 17 • 03 • 2023

கடந்த (17.03.2023) அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர் திருமதி சின்னத்துரை மகேஸ்வரி**

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன விருந்துபசாரமும் இன்று (22.04.2023) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரானை கொல்லங்கலட்டி. 077 541 6397 குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சூசையப்பர் ஆலய வருடாந்தத் திருவிழா

யாழ்ப்பாணம், ஏப். 22

கோப்பாய் மத்தி புனித சூசையப்பர் ஆலய வருடாந்த பெருவிழா இன்று மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 10 நாள்களும் 5.30 மணிக்கு திருப்பலி நடைபெறும் என்றும் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி திருவிழாத் திருப்பலி காலை 6.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# ஒட்டுசுட்டானில் கடும் காற்றால் வீடுகள் சேதம்

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானில் நேற்றுமுன்தினம் நிலவிய கடும் காற்றுடனான காலநிலையால் பல வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு கிராமத்திலுள்ள பின்தங்கிய குடும்பமொன்றின் தற்காலிகக் கொட்டில் தூக்கி யெறியப்பட்டுள்ளதுடன் மேலும் பல வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பல வீடுகளின் கூரைகள் காற்றில் தூக்கி வீசப்பட்டுள்ளன. பல இடங்களில் மரங்கள் குடைசாய்ந்துள்ளன. (சு-19)


## கணக்கு எழுதுநர் தேவை

யாழ் நகர், கோண்டாவிலில் இயங்கும் நிறுவனமொன்றுக்கு கணக்கு எழுதுநர் தேவை. (அடிப்படைக்கணினி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது)

**மதியம் 12.00- 5.30 மணியளவில் நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்.** (CS/50115)AH-1

**74, ராஜா பிளாசா பலாலிவீதி, கோண்டாவில்.**

## English Classes

Gr. 1 to O/L

**பிரத்தியேக மற்றும் குழுவகுப்புகள் நடைபெறுகின்றன**

Let's learn

- Grammar
- Spoken
- School syllabus
- Writing skills
- Monthly exam

**வீடு வந்தும் கற்பிக்கப்படும்.**

**077 331 4608 - ஓட்டுமடம்** (CS24534)AH-1

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வணிக நிலையத்திற்கு கீழ்வரும் வேலைகளுக்கு வேலையாட்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.

1) **பொதியிடல்** (Packing) - பெண்
2) Computer Billing - ஆண், பெண்

**077 419 5015** (CS 24545)A-1

## வேலை வாய்ப்பு

**பக்கவடிவமைப்பாளர்கள் தேவை**

முன்னணி நிறுவனமொன்றுக்கு பக்கவடிவமைப்பாளர்கள் தேவை. ஆண், பெண். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

**077 297 2339, 077 695 4530**

## குருக்கள் or அர்ச்சகர் தேவை

உக்குளாங்குளம் சித்தி விநாயகர் ஆலயத்திற்கு அவசரமாக குருக்கள் or அர்ச்சகர் தேவை. தங்கும் இடம் வழங்கப்படும்.

ஆலய பரிபாலன சபை

**077 603 3720**

## காணவில்லை

புளியடிச்சந்தி, விசுவமடுவைச் சேர்ந்த

**ரஞ்சித்குமார் கோகிஷன்**



(16 வயது மாணவன்) கடந்த **15.02.2023** தொடக்கம் காணவில்லை. இவரை கண்டவர்கள் அல்லது தகவல் தெரிந்தவர்கள் கீழ் குறிப்பிடும் விலாசத்திற்கோ / தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது தர்மபுரம் பொலிஸ் நிலையத்திற்கோ தகவல் தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**பொய்கை உணவகம், புளியடிச் சந்தி, விசுவமடு.**

**தொடர்பு:**

**தந்தை - 076 535 8064**

**தாய் - 077 167 5319**

**தகவல் ரஞ்சித்குமார் சுகிதா** (CS 50118)(N-1)

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 18 பரப்புக் காணி விற்பனைக்குண்டு **(நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- 1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும் (120,000/=)
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்

**பார்வையிடும் நேரம்**

**காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை**

**தொடர்பு:- 076 755 8606**
**077 638 5683** (CS 50091) A-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **கைதடி A-9 பிரதான வீதியுடன்** 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✓ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ✓ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ✓ ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்

**பார்வையிடும் நேரம்:-**

**காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

**077 8147 389**
**077 9865 457**

## காணி விற்பனைக்கு உண்டு

- ✻ யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✻ பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- ✻ மூன்று பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
- ✻ நன்னீரூற்று
- ✻ குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- ✻ பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை. (முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது).

(ஒரு பரப்புக் காணியின் விலை மூன்று இலட்சம் (300,000/=)

**தொடர்பு:**

**077 076 0389**
**076 9119 371**
**076 7390 413** (CS 24546) A-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **சாவகச்சேரிப்** பகுதியில் 06 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 36 உள்ளன.
- ✓ 2 பரப்புகளாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 இலட்சம் முதல் 17 இலட்சம் வரை

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

**077 8147 389**
**077 9865 457** (CS 24547)A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.